


செனனை, மணப்பாக்கம், மியாட் மருத்துவமனையில் இன்று துவங்கவுள்ள, பெருந்தமனி ரத்த குழாய் அறுவை சிகிச்சை சர்வதேச மாநாடு குறித்து, பத்திரிகையாளர்கள் சந்திப்பு நேற்று நடந்தது. இதில், மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர், டாக்டர் மோகன்தாஸ், தலைவர், மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் பாஷி கலந்து கொண்டனர்.

# மியாட் மருத்துவமனையில் ரத்தநாள அறுவை சிகிச்சை சர்வதேச மாநாடு

சென்னை, ஜன. 11-

ரத்தநாள அறுவை சிகிச்சை குறித்த, இரண்டு நாள் சர்வதேச மாநாடு, சென்னை, மியாட் மருத்துவமனையில், இன்று துவங்குகிறது.

இதுகுறித்து, மருத்துவமனையின் இதயவியல் நிபுணர் சிவகுமார் கூறியதாவது:

இதயத்தில் இருந்து மூளை, நுரையீரல், சிறுநீரகம், கை, கால் உள்ளிட்ட, உடல் உறுப்புகளுக்கு, பெருந்தமனி எனும் ரத்த நாளம் வாயிலாக ரத்தம் செல்கிறது. ரத்த கொதிப்பு, நீரிழிவு நோய், வயோதிகம் போன்ற காரணங்களால், இந்த ரத்த நாளத்தில் பிளவு ஏற்பட்டு(அயோட்டிக் அன்யூரிஸம்), உடல் உறுப்புகளுக்கு செல்லும் ரத்தம் தடைப்பட்டு, மரணம் நிகழ வாய்ப்புள்ளது.

இந்தியாவில், 6 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு, பெரும்தமனி பிரச்னை உள்ளது. இதற்கான அறிகுறிகள் தெளிவாக தெரியாததால், இதுகுறித்த விழிப்புணர்வு பொது மக்களிடம் குறைவாக உள்ளது.

பெருந்தமனி வீக்கத்தால் கூட, ஒருவருக்கு, மார்பு மற்றும் அடிவயிற்றில் அடிக்கடி வலி ஏற்படலாம். இந்த வலியை உணர்வோர், உடனே, உரிய பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

பரிசோதனையில், பெருந்தமனியில் பிளவு கண்டறியப்பட்டால், அவர்களுக்கு, அறுவை சிகிச்சைகள் மூலம், இக்குறை சரிசெய்யப்படும். இந்த ரத்தநாள அறுவை சிகிச்சையில், 'என்டோவாஸ்குலர் கிராப்டிங்', போன்ற புதிய தொழில்நுட்பங்கள் வந்துள்ளன.

இவை குறித்தும், 'அயோட்டிக் அன்யூரிஸம்' குறித்தும், இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது. இதில், ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த, 200க்கும் மேற்பட்ட நிபுணர்கள் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு சிவகுமார் கூறினார்.

மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.